## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ''அதிகாரசபை'' மற்றும் அதன் துணைக் கம்பனிகளதும் ''குழுமத்தின்'' 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிகான குறிப்புக்கள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 இன் இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் மற்றும் குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை வெளிப்படுத்தவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அபிப்பிராயமொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகார சபையின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க, அதிகார சபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிபொறுப்பை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, ஜர்னல், ஜரனல் வவுசர், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச்

செல்லல் தொடர்பில் கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதிகார சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வாடிக்கையாளர்களினது வைப்புகளிற்குரியதான அட்டவணையை பரிசோதிக்கும் போது 2020 திசெம்பர் 31 வரை 04 சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் விஞ்சி ரூபா 6,042.68 மில்லியனை அதிகார சபையினால் மூலதன செலவினமாக செலவிடப்பட்டிருந்ததால் அவ் வாடிக்கையாளர்களினது வைப்பு மீதி மறை பெறுமானத்தை கொண்டிருந்தது. | வாடிக்கையாளர்களினது வைப்பு மீதிகளிற்கு எதிராக மூலதன செலவினம் பதிவழித்ததால் இந்த மறை மீதி கொண்டுள்ளதுடன் ஒட்டு மொத்த வாடிக்கையாளர்களின் வைப்பு மறை மீதியை சரி செய்ய 2021 திசெம்பர் 31 திகதிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேவை பெறுனர் கருத்திட்டங்களில் மூலதன செலவினம் சரியாக இனங்காண முடியுமானவாறு கணக்கு முறையை தயாரிக்க வெண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் - 01 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் | | |
| (i) | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்து வழங்குவதற்கான கருத்தியல் கட்டமைப்பில் விவரிக்கப்பட்டுள்ளவாறு சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களினுள் குறிப்பிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 திசெம்பர் 31 திகதியளவில் அமுல்படுத்தும் வகையில் 2021 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் நடத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமான முதலீட்டுச் சொத்துக்களின் ஒரு பகுதி (கட்டமைக்கப்பட்ட சொத்துக்கள், வீட்டுத் திட்டங்கள் மற்றும் அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்கள்) கூட்டுத் தொகை ரூபா 602,256 மில்லியனிற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில். இந்த | 2021 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சொத்து மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் கணக்குகளிற்கு மேற்கொள்ள தேவையான சீராக்கம் மற்றும் வெளிப்படுத்துதல்களை மேற்கொள்ளும் பணிகள் வெளித்தரப்பு கணக்காய்வு நிறுவனமொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அப் பணிக்கள் முடிவடைந்தவுடன் அதற்காக அதிகாரியின் கணக்காய்வு குழுவின் மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் தேவையான முன்நடவடிக்கை | சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களின் ஊடாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட பெறுமானங்கள் செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்காததுடன் கணக்குக் குறிப்பொன்றின் மூலம் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 திகதியன்று நிதிநிலைமை கூற்றில் காண்பிக்கப்படும் அதிகார சபையின் முதலீட்டுச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 96,706 மில்லியனானதுடன் 2019 திசெம்பர் 31 திகதியன்று மதிப்பிடப்பட்ட முதலீட்டுச் சொத்தின் பெறுமதி மற்றும் இந்த பெறுமதிக்கிடையிலான வித்தியாசம் ரூபா 505,550 மில்லியனெனவும் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களின் ஊடாக எடுத்துக் காட்டவில்லை என அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்படுவதென தெரிவிக்க விரும்புகிறோம் | |
| (ii) | நியமத்தின் 28 ஆம் பத்தியின் பிரகாரம் குத்தகைதாரர்களினால் மொத்தமாகவோ அல்லது தவணையாகவோ செலுத்திய போதும் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பிற்போடப்பட்ட குத்தகை பொறுப்பின் மொத்த பெறுமதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் போது இனங்காணப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2020 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 10,439.68 மில்லியனிற்கான குத்தகை பெறுமதியுடன் குத்தகை ஆதனங்களிற்காக பண அடிப்படையில் அதன் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டிருந்ததாக கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேலும் 216 குத்தகை சொத்துகளுக்கான பிற்போடப்பட்ட குத்தகை பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்கியிருக்கவில்லை. | குறித்த சந்தர்ப்பம் தொடர்பான திருத்தங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | பிற்போடப்பட்ட குத்தகை பொறுப்பின் மொத்த பெறுமதியை ஒப்பந்தத்திற்கு உட்படும் சந்தர்ப்பத்தில் இனங்காண வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் - 15 இன் பிரகாரம் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் மீண்டுவரும் பொறுப்புகளை வெவ்வேறாக இனங்காண வேண்டிய போதும் அதிகார சபை வாடிக்கையாளர் கருதிட்டங்களால் | வாடிக்கையாளரின் கருத்திட்டங்களால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டத்தை வேறாக இனங்காணும் முறையை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பின்பற்றப்படவில்லை. | நியமத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் வாடிக்கையாளர் கருத்திட்டங்கள் தொடர்பாக இலாபம் அல்லது நட்டத்தை வெவ்வோறாக இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (Client Projects) ஏற்படும் வருமானம் அல்லது செலவுகளை அதன் பிரகாரம் இனங்கண்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக மீளாய்வர்ணடினுள் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 4,679.65 மில்லியனான வைப்புக்களிலிருந்து அத்திகதி வரை அக்கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட செலவான கூட்டுத் தொகை ரூபா 4,298.15 மில்லியனை குறைத்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் மீதியை இனங்கண்டிருந்தது. அவ்வாறே வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுவரும் வாடிக்கையாளர் கருத்திட்டங்கள் நடைமுறை வேலைகளாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 – ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் பத்தி 51 இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் அதன் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட் காலம் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் அந்த் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதிகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 பிரகாரம் மதிப்பிடப்பட்ட பிழையை சரி செய்ய வேண்டும். எவ்வாறாயினும் அதிகார சபையினால் மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய பதிவழித்த பெறுமானம் ரூபா 2,909.53 மில்லியனான சொத்துக்கள் தொடர்பில் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 729.20 மில்லியனான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்மானம் செய்யப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு நிலவிய போதும் அந்த சொத்துக்களில் மதிப்பிடப்பட்ட பிழையை சரிசெய்வது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். அதிகார சபையின் நிலையான சொத்துக்களில் தற்போது பயன்பாட்டில் உள்ள ஆனால் பெறுமானத் தேய்வடைந்து முடிவடைந்த வாகனங்களை மீள்மதிப்பீடு செய்து 2023 ஆம் ஆண்டில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே ஏனைய நிலையான சொத்துக்களையும் குழுக்களாக மீள்மதிப்பீடு செய்யும் முறையை ஆரம்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம் குறித்த நாளாதுவரையாக்கல் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலத்தை மீளாய்வு செய்து தேவையான சீராக்கங்களை செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 17 இன் ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகார சபையினால் 28 கெப் வண்டிகளை குத்தகை முறையிற்கு கொள்வனவு செய்வது தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று தொங்கல் வட்டி கணக்கு மீதியான ரூபா 56.41 மில்லியன் தொகை அன்றைய திகதி கடன் தொகையிலிருந்து கழித்து காண்பிக்கப்படாத காரணத்தால் நடைமுறை பொறுப்பு ரூபா 11.88 மில்லியனாலும் நடைமுறையல்லா பொறுப்பு ரூபா 44.53 மில்லியனாலும் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தன. | அதற்குரிய கணக்கீட்டு குறிப்பை சீரர்க்கிக் காண்பிக்க 2021 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை கடன்படுனர்களிடமிருந்து தொங்கல் வட்டி மீதியை கழித்து காண்பிக்க வேண்டும். |
| (உ) | அரசாங்க மானியங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் பந்தி 12 இன் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அதிகாரசபைக்கு பொது திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த ரூபா 357.39 மில்லியன் அரசாங்க மானியங்கள் தொடர்பாக காலக் கழிவு கணக்கிடப்பட்டிருக்காததுடன் அந்த மானியம் எந்த பணிகளிற்கா அதிகாரசபைக்கு கிடைத்ததென்பது தொடர்பாக எவ்வித தகவலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மானியத்திற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட சொத்துகள் தொடர்பான தகவல்களை கண்டறிவதில் உள்ள சிரமம் காரணமாக ரூபா 357.39 மில்லியன் பெறுமதியான மானியங்கள் அவ்வாறு காலக் கழிவு செய்யப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் பிரகாரம் அரச மானியங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 36 – சொத்துக்கள் கழிவு நட்டம் | | |
| (i) | நியமத்தின் 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானம் குறைவடைவது தொடர்பாக ஏதேனும் அறிகுறிகள் காணப்படுமாயின் குறித்த மீதிக்காக கழிவு நட்ட பரிசோதனை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். எனினும் வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த 11 கருத்திட்டங்களிற்கான முடிவடையாத பெறுமதி ரூபா 350.58 மில்லியன் 2018 ஆண்டு முதல் முடிவடையாத வேலைகள் கணக்கின் கீழ் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்பட்ட போதும் அவ்வாறான கழிவு நட்ட பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத் தொகை ரூபா 349.67 மில்லியன் செலவொன்றுடனான மீதொட்டமுள்ள மற்றும் கொட்டுவேகொட கருத்திட்டங்களில் காணி சுவீகரிப்பு முடிவடையவில்லை. ஏனைய கருத்திட்டங்களில் தற்போதைய முன்னேற்றம் காணிப் பிரிவினால் பெறப்பட்டு குறித்த கருத்திட்டம் தொடர்ந்தும் செயற்படாவிடில் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்று புத்தகங்களிலிருந்து அகற்றல் மற்றும் அதற்குரிய சீராக்கங்களை 2022 ஆண்டு | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் கழிவு நட்ட பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதிக்கூற்றுக்களினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | நியமத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களிற்கு உரிய கழிவு நட்ட பெறுமானங்களும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2019 ஆண்டு திசெம்பர் 31 திகதிக்கு மற்றும் 2020 ஆண்டு திசெம்பர் 31 திகதிக்கு அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டு ஆதன அட்டவணை இணக்கம் செய்கையில் 49 ஆதனங்களின் பெறுமதி ரூபா 1,319.85 மில்லியனால் அதிகரித்திருந்த போதும் அந்த ஆதனங்களிற்குரியதாக மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றில் ஆண்டின் சேர்ப்பனவாக ரூபா 920.02 மில்லியன் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தால் அதற்கிடையில் ரூபா 399.83 மில்லியனான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 12 முதலீட்டு ஆதனங்களின் பெறுமானம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 4,651.72 மில்லியனினால் குறைவடைந்திருந்த போதும் அக் குறைவும் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்காததுடன் இந்த வித்தியாசங்களிற்குரிய காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்திட்டங்களின் மதிப்பீட்டு ஆதனங்களின் பெறுமதி அதிகரித்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்பட்டுள்ள தாக்கம் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய முறை தொடர்பாக பெறுகைகள் நடைமுறை மூலம் தகைமை பெற்ற வெளி கணக்காய்வு கம்பனியொன்றிற்கு பணிகள் ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன், அதனூடாக கிடைக்கும் பரிந்துரை மீது குறித்த சீராக்கம் 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் எடுத்துக் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | கழிவு நட்ட பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு கழிவு நட்டம் காணப்படின் நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 இன் 21 ஆம் பந்தியில் குறிப்பிடுவதன் பிரகாரம் கற்புலனாகாத சொத்துக்கள் வேறாக இனங்காணப்பட வேண்டிய போதும் அதற்கு முரணாக அதிகார சபைக்கு சொந்தமான கிரயம் ரூபா 23.21 மில்லியனான தொகுதி மற்றும் மென்பொருள், ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் அப் பெறுமானத்தால் மிகையான கணக்கிடப்பட்டிருந்ததுடன் கற்புலனாகாத சொத்துக்கள் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளதன் பிரகாரம் தொகுதி மற்றும் மென்பொருட்களின் கிரயம் 2021 ஆண்டு முதல் கற்புலனாகா கற்புலனாகா சொத்துக்களின் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | கற்புலனாகாத சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வேறாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 40 – முதலீட்டு ஆதனம் | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இந் நியமத்தின் 16 பந்தி பிரகாரம் வருமானம் ஈட்டும் மற்றும் எதிர்கால முதலீட்டு சந்தர்ப்பம் காணப்படுபவைகளை முதலீட்டு ஆதனங்களாக இனங்காண வேண்டிய போதும் அதற்கு முரணாக எவ்வித வருமானத்தையும் ஈட்டாத நகர அபிவிருத்தி மற்றும் அலங்கார நடவடிக்கைக்கான 13 கருத்திட்டங்களிற்காக அதிகார சபையினால் செலவிடப்பட்ட ரூபா 508.86 மில்லியன் மற்றும் 2020 திசெம்பர் 31 திகதியின் பிரகாரம் பதிவழித்த பெறுமானம் ரூபா 43.19 மில்லியன் ஆன போதும் அதிகார சபைக்கு சொந்தமான ஆதனங்கள், பொறிகள் போன்றே ரூபா 849.27 மில்லியனான ஏனைய நிறுவனங்களிற்காக மேற்கொண்ட 03 கருத்திட்டங்களும் முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேலும் நியமத்தின் 07 பந்தி பிரகாரம் எதிர்காலத்தில் முதலீட்டு சந்தர்ப்பங்களில் முதலீடு செய்ய உத்தேச ஆதனங்கள் இருப்பின் அந்த ஆதனங்களும் முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் பாராளுமன்ற காணிக்கு உரித்தான 1,167 ஏக்கரான காணியில், 37 ஏக்கர்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக ஒதுக்கி இருந்த போதும் அந்த காணிப் பகுதியை மதிப்பிட்டு முதலீட்டு ஆதனத்தின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | வருமானம் ஈட்டாத ஏனைய ஆதனங்களாக இனங்கண்டுள்ள 24 கருத்திட்டங்களிற்காக செலவிடப்பட்ட ரூபா 10,099.67 மில்லியனில் இருந்து ஏற்பட்ட சொத்து மூலதன மேம்பாட்டிற்காக ஆகும். ஏனைய நிறுவனங்களிற்காக மேற்கொண்ட 05 கருத்திட்டங்களில் 03 கருத்திட்டங்கள் வாடிக்கையாளர் கருத்திட்டங்களிற்கு உள்ளடக்க இணங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களை இனங்காண வேண்டும். |
| (ii) | நியமத்தின் 30, 32 (அ) மற்றும் 34 பந்திகளில் குறிப்பிட்டுள்ள விதிவிளக்கு 33 – 35 பந்திகளில் குறிப்பிட்டுள்ள நியாயமான பெறுமதி படிவத்தை அல்லது 56 பந்தியில் குறிப்பிடப்படும் கிரய படிவத்தை நிறுவனமொன்றினால் அதன் கணக்கீட்டு கொள்கையாக தெரிவு செய்ய வேண்டும். நியமத்தின் 53 பந்தி இலக்கம் பிரகாரம் நியாயமான பெறுமதியை நம்பகமாக அளவையிட இயலுமை காணப்படாத சந்தர்ப்பத்தை தவிர தெரிவு செய்த கொள்கையை அனைத்து முதலீட்டு | 2021 ஆண்டில் மேற்கொண்ட சொத்துக்கள் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கணக்குகளிற்கு மேற்கொள்ள தேவையான சீராக்கம் மற்றும் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளும் பணிகளை வெளிக் கணக்காய்வு நிறுவனமொன்றினூடாக மேற்கொண்டு வருவதுடன் அப் பணிகள் முடிவடைந்தவுடன் | நியமத்தின் பரிந்துரை பிரகாரம் முதலீட்டு சொத்துக்களின் நியாயமான பெறுமானம் நிதிக்கூற்றுக்களில் எடுத்துக்காட்டும் வகையில் கணக்கு கொள்கையை தெரிவு செய்து செயற்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| ஆதனங்களையும் கணக்கு வைப்பதற்காக பயன்படுத்த வேண்டும். அவ்வாறாயினும், மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அதிகார சபையினால் சில முதலீட்டு ஆதனங்களை கிரயத்திற்கும், சிலவற்றை மீள்மதிப்பீட்டு பெறுமானத்திற்கும் சில சந்தர்ப்பங்களில் இரண்டு பெறுமதிகளின் கூட்டுத் தொகையாகவும் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடுவதாக அவதானிக்கப்பட்டது. | அதற்காக அதிகார சபையின் கணக்காய்வு குழுவின் மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் தேவையான முன்நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்க விரும்புகிறேன். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 17 இற்கு மற்றும் அதிகார சபையின் குத்தகை தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 1.4.6.7 இற்கு முரணாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமை கூற்றில் குத்தகை கால எல்லை இனங்காணாத 311 குத்தகைகள் காணப்பட்டதுடன் அவற்றின் குத்தகை பெறுமதி ரூபா 840.93 மில்லியனானதுடன் அதற்குரிய குத்தகை வருமானம் எதனையும் இனங்கண்டு இருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக அதிகார சபையினால் கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் குத்தகை கால எல்லையின் ஆரம்ப திகதி குறிப்பிடப்படாத ரூபா 6,433.13 மில்லியன் பெறுமதியான 304 குத்தகை ஆதனங்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,048.95 மில்லியன் குத்தகை வாடகை வருமானம் இனங்காணப்பட்டிருந்தது. | வருமானத்தின் சரியான தன்மையை உறுதி செய்து தேவையான சீராக்கங்களை நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்கல் 2022 ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | நியமத்திற்கு மற்றும் அதிகார சபையின் குத்தகை வருமானம் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை பிரகாரம் குத்தகை வருமானத்தை இனங்காண வேண்டும். |

**1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு அதிகார சபையினால் தயாரித்திருந்த பரீட்சை மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 628.51 மில்லியன் பெறுமதியான 03 வரவு மீதிகளை மற்றும் ரூபா 628.49 மில்லியன் பெறுமதியான 04 செலவு மீதிகளை மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கவனத்தில் எடுத்திருக்கவில்லை. | குறித்த சீராக்கம் 2021 ஆண்டில் மேற்கொள்ளப்படும். | பரீட்சை மீதியின் அனைத்து மீதிகளும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் வகையில் கணக்கீட்டு செயன்முறை தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகார சபை அமைக்கப்பட்ட 1979 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலத்தினுள் அவ்வப் போது அதிகார சபையினால் செயற்படுத்திய 1303 கருத்திட்டங்களிற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 162,280.56 மில்லியனான செலவு, அபிவிருத்தி செலவு எனும் பெயரில் 115 மூலதன கணக்குகளின் கீழ் பொதுப் பேரேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அந்த மீதிகள் நடைமுறை வேலைகள், முதலீட்டு ஆதனம், காணி மற்றும் கட்டிடம், கொடுக்கல் வாங்கல் தாரர்களின் கருத்திட்டம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் எனும் 5 வகைகளின் கீழ் ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி உள்ளடக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக சொத்துக்களை எடுத்துக் காட்ட பேரேட்டினுள் சரியான மற்றும் தெளிவான முறைமையொன்று இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் அதிகார சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுத் தொகுதி நிதியறிக்கைகளை தயாரிக்க நேரடியாக பயன்படுத்த முடியாதென அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக தொகுதியினுள் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை மேற்கொள்ள தேவையான குழுவொன்றை நியமிக்கவும் அதற்கான மேலதிக ஆலோசனைகளை அரச கணக்காய்வு பிரிவிடம் பெற்றுக் கொண்டு 2022 கணக்குகளிற்குரியதாக பரீட்சை மீதியை திருத்தி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறிவிக்கிறேன். | கணக்கு முறைமையை மீள் திருத்தி சொத்துக்கள் எடுத்துக் காட்டப்படும் வகையில் கணக்கு முறைமையை தயாரிக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அதிகார சபையின் | இக் கூற்றுடன் இணங்குகிறேன். RETSUP | நிறுத்தி வைத்த இலாபத்தை உரிமை |

பேரேட்டின் மூலமாக தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் உள்ளடங்கும் மொத்த சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதி அத்திகதியில் பொறுப்புக்கள் மற்றும் உரிமைகளின் கூட்டுத் தொகைக்கு சமமாகாததால் அதற்கிடையிலான ரூபா 2,147 மில்லியனான வித்தியாசம் நிறுத்தி வைத்த மேலதிக கணக்கின் கீழ் பரீட்சை மீதியினுள் காட்டப்பட்டிருந்தது. எனினும் இந்த கணக்கு அதிகார சபையின் பொது பேரேட்டினுள் குறிப்பிட்டிருக்கவில்லை.

அவ்வாறே இந்த நிறுத்தி வைத்த மேலதிக கணக்கின் மீதி 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலத்திற்கு உரியதாவதுடன் பரீட்சை மீதியில் காட்டப்படும் ரூபா 73,478.73 மில்லியன் மீதி 2015 ஆண்டு வரையான காலத்திற்கு உரியதாவதால் அந்த ஒவ்வொறு மீதிகளையும் கூட்டும் போது நிதிநிலைமை கூற்றில் 2020 சனவரி 01 திகதியிலான உரிமை மாற்றங்கள் கூற்றில் காட்டப்படும் 2020 சனவரி 01 திகதியான திரண்ட இலாபத்திற்கு சமமாக வேண்டிய போதும் அதற்கிடையில் ரூபா 10.26 மில்லியனான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

என பரீட்சை மீதியில் காட்டியுள்ள ரூபா 2,147 மில்லியன் தொகையால் எடுத்துக் காட்டப்படுவது அதிகார சபை 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை ஒவ்வொறு ஆண்டினுள்ளும் அறிக்கையிட்டுள்ள இலாபம் மற்றும் நட்டங்களின் மொத்த கூட்டுத் தொகையாகும்.

மாற்றங்கள் கூற்றினூடாக நிதிநிலைமை கூற்றிற்கு சீராக்கும் வகையில் கணக்கீட்டு முறைமை தயாரிக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அதிகார சபையினால் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் 99 ஆண்டு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த 02 காணிகளிற்காக ரூபா 2,098.2 மில்லியன் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் அதிகார சபைக்கு கிடைப்பனவாக கவனத்திற் கொண்டு பண அடிப்படையில் அந்தப் பெறுமதி பிற்போடப்பட்ட குத்தகை பொறுப்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தது. மேலும் குத்தகை காலப் பகுதி முடிவடைந்த ரூபா 7.15 மில்லியன் பெறுமதியான 11 குத்தகை ஆதனங்களும் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு கூட்டுத் தொகை ரூபா 2105.35 மில்லியனால் பிற்போடப்பட்ட குத்தகை பொறுப்பு பெறுமதி மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சுட்டிக் காட்டிய அவதானிப்பில் உள்ளடங்கும் 03 சந்தர்ப்பங்களும் ஏற்கப்பட்டுள்ளன. இவற்றில் 02 சந்தர்ப்பங்கள் எதிர்வரும் 2021 ஆண்டில் சீராக்கம் மேற்கொள்ளப்படும். | பிற்போடப்பட்ட குத்தகை பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிதிநிலைமை கூற்றில் பிற்போடப்பட்ட வரிப் பெறுமதியின் கீழ் காட்டப்படும் புதிய குத்தகை மற்றும் பிழை திருத்தமென காட்டியுள்ள ரூபா 6,497.52 மில்லியன் பெறுமதி தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | புதிய குத்தகை பெறுமதி ரூபா 294.84 மில்லியன் பிழை திருத்தம் / ஐர்னல் குறிப்பினூடாக கணக்கீடு செய்யப்பட்ட வரவு பெறுமதி ரூபா 319.18 மில்லியன் மற்றும் செலவு பெறுமதி ரூபா 235.90 மில்லியன். | பிற்போடப்பட்ட குத்தகை உள்ளிட்ட மீதிகளின் சரியான தன்மை மற்றும் நிலையான தன்மையை உறுதி செய்து கொள்வதற்காக குறித்த அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு வழங்க வேண்டும். |
| (ஊ) | மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது இனங்காணப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நானாவித மூலங்களிலிருந்து அதிகார சபைக்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த 225 சொத்து வகைகள் காணப்பட்ட போதும் அந்த சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | கடந்த ஆண்டுகளில் ஏனைய நிறுவனங்களில் இருந்து அதிகார சபைக்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு 2022 ஆண்டில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அன்பளிப்பாக கிடைக்கும் சொத்துக்களை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |
| (எ) | அதிகார சபையினால் வேலைகளை பூர்த்தி செய்து வாடிக்கையாளர்களிற்கு | ரூபா 2126.44 மில்லியனான 2022 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்பு | வேலைகளை பூர்த்தி செய்து குறித்த வாடிக்கையாளர்களிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைத்திருந்த கருத்திட்டங்களிற்குரியதான ரூபா 2,126.44 மில்லியன் பெறுமதி 2020 திசெம்பர் 31 திகதியளவிலும் பூர்த்தியாகாத வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக பூர்த்தியாகாத வேலைகள் கணக்கு அப் பெறுமானத்தால் மிகை கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி ரூபா 103.98 மில்லியன் மீதியுடனான 8 கருத்திட்டங்களில் குறித்த பணிகள் தொடர்பாக எவ்வித விபரமும் குறிப்பிடப்படாததுடன் நிலையம் மாத்திரம் பூர்த்தியாகாத வேலை அட்டவணையில் காட்டப்பட்டிருந்தன. | கருத்திட்ட வகைப்படுத்தலின் கீழ் கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கருத்திட்டங்களிகுரியதாக அவற்றின் கருத்திட்ட பெயர்களை காணிப் பிரிவில் காணப்படும் தகவல்களின் பிரகாரம் சரிசெய்து 2021 கணக்குகளுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்படைத்திருந்த கருத்திட்டங்கள் பூர்த்தியாகாத வேலைகளிலிருந்து அகற்றப்பட வேண்டியதுடன் அதிகார சபையின் கருத்திட்டங்கள் தொடர்பாக அனைத்து விபரங்களையும் நாளாதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (ஏ) | நகர அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றினுள் அதன் துணைக் கம்பனியான வோடர்ஸ் எஜ் கம்பனியின் முதலீட்டு பெறுமதியாக ரூபா 200 மில்லியன் காட்டப்பட்டிருந்த போதும் இப் பெறுமதிக்காக வோடர்ஸ் எஜ் கம்பனி பங்குளை விநியோகித்திருக்கவில்லை. | பங்கு விநியோகம் இது வரை செய்யப்படாததால் அந்த முதலீட்டிற்குரிய பங்கு சான்றிதழ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியவில்லை. | பங்கு சான்றிதழ் இல்லாது இவ்வாறு பணம் ஈடுபடுத்துவது முதலீடாக கவனத்திற் கொள்வதனை தவிர்க்க வேண்டும். |
| (ஐ) | அதிகார சபையின் துணைக் கம்பனி ஒன்றான லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனிக்கு அதிகார சபையின் வாடிவீடுகளின் இயக்க நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் 31 திகதியளவில் கம்பனிக்கு உரித்தாக 31 வாடிவீடுகள் காணப்பட்ட போதும் இவை அதிகார சபையின் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 ஆண்டின் அதிகார சபையின் மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 02 வாடிவீடுகள் ரூபா 2,004 மில்லியனிற்கு மதிபிப்பிடப்பட்டிருந்த போதும் குறித்த பெறுமானங்களை கணக்குகளிற்கு எடுத்திருக்காத காரணத்தால் முதலீட்டு ஆதனம் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | அதிகார சபையின் துணைக் கம்பனி ஒன்றான லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியினால் முாகமை செய்யப்படும் 31 வாடிவீடுகள் காணப்பட்ட போதும் 29 வாடிவீடுகளின் உரிமை குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு உரித்தாவதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய 02 வாடிவீடுகள், 2020 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அனைத்து முதலீட்டு சொத்துக்களையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | 2020 திசெம்பர் 31 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காணிக்காக செலுத்த வேண்டிய இழப்பீடாக ரூபா 11,831.83 மில்லியன் காட்டப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 திகதி அதிகார சபையினால் கணக்காய்விற்கு உறுதி செய்த தகவல்களின் பிரகாரம் மேலும் இழப்பீடு மற்றும் வட்டியாக குறிப்பிட வேண்டிய ரூபா 8,894.27 மில்லியன் நிலவி காரணத்தால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அதிகார சபையிலான மொத்த பொறுப்புக்களும் அப் பெறுமானத்தால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | செலவுகள் அல்லது வருமானம் அட்டுறு செய்தல் மற்றும் தீர்த்தல் செய்யுமாறு குறித்த பிரிவினால்/ அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | ஐந்தொகை திகதியில் நிலவும் அனைத்து சொத்துக்கள்/ பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | 2019 திசெம்பர் 31 திகதியன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலுத்த வேண்டிய இழப்பீட்டு அட்டவணையில் நிலவிய ரூபா 366.55 மில்லியனான 04 மீதிகளை முன் கொண்டு வரும் போது அதாவது 2020 திசெம்பர் 31 திகதியன்று சமர்ப்பித்திருந்த செலுத்த வேண்டிய இழப்பீடு அட்டவணையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய இழப்பீடு 2020 ஆண்டில் செலுத்துதல் மற்றும் காணிகளை சுவீகரிக்கும் சட்டத்தின் 50 ஆம் பிரிவின் பிரகாரம் நீக்கப்பட்டிருந்ததால் அகற்றப்பட்டது. | நீக்கப்பட்டிருந்ததால் ஏற்படும் தாக்கத்தை |
| (ஔ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் மற்றும் நடைமுறை பொறுப்பின் கீழ் குறிக்கப்பட்டிருந்த 2020 திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய இழப்பீடு மற்றும் வட்டி அளவான ரூபா 562.43 மில்லியன் சரியாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த சீராக்கங்கள் 2020 நிதி கூற்றுக்கள் மீள் மதிப்பீட்டின் போது (re- state) சரியாக எடுத்துக்காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறையல்லாத பொறுப்புக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.5 ஒருங்கிணைத்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டின் பின்னர் பேலியகொடை வெயா ஹவுஸஸ் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் மீளாய்வாண்டு | கம்பனியின் 2017 திசெம்பர் 31 திகதிக்குரியதாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அக் கம்பனியினால் வழங்கியுள்ள கணக்கறிக்கைகள் ஊடாக | 2017 ஆண்டின் பின்னர் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாததுடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கணக்காய்வு |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 திகதிற்கு ஒருங்கிணைந்த நிதிக்குற்றுக்களை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட்டிருந்த மேற் குறிப்பிட்ட கம்பனியின் ரூபா 267.88 மில்லியனான சொத்துக்கள் மற்றும் ரூபா 25.74 மில்லியனான பொறுப்புக்களின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | அதன் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள இத்துடன் தங்களிற்கு அனுப்புகிறேன். | செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | குழுமத்திற்கு சொந்தமான அதன் 05 வியாபார அலகுகளிற்கிடையில் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வோட்டஸ் எஜ் கம்பனி மாத்திரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 பிரகாரம் பணிக்கொடைக்காக செம்மையாக்கல் செய்திருந்தமையால் குழுமைத்திற்குரிய பணிக்கொடை ஒதுக்குதல் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இற்கு இணங்க மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | தாய் நிறுவனத்தினால் இது தொடர்பாக குறித்த துணைக் கம்பனிகளுக்கு தேவையான அறிவுறுத்தல் வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த துணைக் கம்பனி இரண்டினாலும் 2023 ஆண்டு முதல் இறுதிக் கணக்கினுள் அது தொடர்பாக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பரிந்துரை பிரகாரம் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது வ/ப வோட்ர்ஸ் எஜ் நிறுவனத்திற்காக 100 சதவீத பங்குரிமையுடன் கூடிய அதிகார சபைக்கு நூற்றுக்கு நூற்று சதவீத நிர்வாக அதிகாரம் நேரிலா உரித்தாகியுள்ள துணைக் கம்பனியான வோடர்ஸ் எட்ஜ் ரிக்கிரியேஷன் கம்பனியின் 2020 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்கள் குழுமத்திற்கு ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில் லை. | மேற் குறிப்பிட்ட கூற்றுடன் உடன்படும். அதிகார சபையினால் 2021 ஆண்டிற்குரியதாககுகள் தயாரிக்கும் பொது வோடர்ஸ் எட்ஜ் கம்பனியின் குழுமத்திற்குரிய கணக்குகள் பயன்படுத்தப்படும். | ஒருங்கிணைந்தலின் போது அத்திகதிக்கு குழுமத்திற்கு சொந்தமான அணைத்து துணைக் கம்பனிகளை குழுமத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு உள்ளடக்க வேண்டும். |

**1.5.6 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| | விடயம் | தொகை ரூபா மில். | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | முதலீட்டுச் சொத்துக்கள் | 92,931 | உரிய கடிதக் கோவைகள், குத்தகை காலம், குத்தகை ஆரம்பிபக்கப்பட்ட திகதி, வெவ் வேறாக ஆதனங்களை இனங்காண முடியுமானவாறு ஆதன பெயர பதிவேடு. | கணக்காய்வு பந்தியின் குறிப்பிடப்பட்ட முதலீட்டு ஆதனங்களின் தன்மை பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களாகவும், காலத்தின் பிரகாரம் 99, 50 மற்றும் 30 ஆண்டுகள் மற்றும் மாதாந்த அடிப்படையிலும் உள்ள அனைத்து தகவல்கள் காண்பிக்கப்பட்டுள்ள விதத்தில்வகைப்படுத்தப் பட்டுள்ளது. | அதிகார சபையின் பிரதான வருமானமான முதலீட்டு ஆதனம் தொடர்பாக முறையான கட்டுப்பாடு, அறிக்கையிடலிற்காக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | வாடிக்கையாளர் வைப்புக்கள் | 32.05 | கருத்திட்டத்தை இனங்காண்பது தொடர்பான எவ்வித தகவல்களும் இல்லை. | விடயங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்காக மூல ஆவணங்களை கண்டறிந்து அதன் மூலம் சரியான சீராக்க நடவடிக்கைகளை 2021 திசெம்பர் 31 திகதிக்கு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கருத்திட்டத்தை இனங்காண முடியுமான வகையில் தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளித்தரப்பினரிற்கு குத்தகை வழங்கியிருந்த 07 பேருந்து தரிப்பிடங்களிலிருந்து 2023 பெப்ரவரி 01 திகதிக்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 13.18 மில்லினாக இருந்தது. | 07 பேருந்து தரிப்பிடங்களிலிருந்து 2020 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டியதாக இருந்த வருமானம் ரூபா 9.07 மில்லினாகும். 2023 பெப்ரவரி 01 திகதிக்கு அது ரூபா 13.18 மில்லினாகும். | பெறவேண்டிய மீதிகளை விரைவில் அறவிட செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஜுலை 16 திகதிய இலக்கம் 019/502/0970/22 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்னிப்பிட்டிய வீரமாவத்தையில் அமைந்துள்ள 500 வீடுகளைக் கொண்ட | இந்த B கட்டிடத்தின் முகாமைக்காக மாதாந்தம் வீட்டு உரிமையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய தொகையிலிருந்து இதுவரை ரூபா 916,498.80 பெறப்பட்டுள்ளது. மின்சார | அறவிட வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீடமைப்புத் திட்டத்திலிருந்து ஓராண்டு வாடகை அடிப்படையில் 101 வீட்டுத் அலகுகள், வருடாந்த வாடகை ருபா 69.45 மில்லியன் அரசாங்கத்தினால் அதிகாரசபைக்கு செலுத்தும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. எனினும் 2023 ஜூலை அளவிலும் இதற்கான வாடகை அதிகார சபைக்கு கிடைத்திருக்காததுடன் ஒவ்வொரு வீட்டு உரிமையாளராலும் செலுத்த வேண்டிய பராமரிப்பு செலவுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்கு செலுத்த வேண்டிய மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் ஆகியவற்றிற்கு பணம் செலுத்ததாத காரணத்தால் 2023 ஜூலை 31 திகதிக்கு ரூபா 9.88 மில்லியன் அதிகார சபைக்கு அறவிட வேண்டியிருந்தது. | விநியோகத்திற்காக ரூபா 503,734.35 மற்றும் நீர் பட்டியலாாக ரூபா 99,810.68 தொகையும் பெறப்பட்டுள்ளது. எனினும் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காகவும் நீர் மற்றும் மின்சார பட்டியல்களிற்காகவும் பாரிய நிலுவைத் தொகையொன்று, அதாவது ரூபா 9.88 மில்லியன் இந்த அதிகார சபைக்கு அறவிட வேண்டியுள்ளது. | |
| (இ) | நகர மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 11,900 வீட்டுத் அலகுகளிலிருந்து 2023 ஜனவரி 31 திகதிக்கு ரூபா 798.56 மில்லியனான குத்தகை வாடகை மற்றும் ரூபா 154.19 மில்லியனான நீர் படடியல்களிற்கான கூட்டுத்தொகை ரூபா 952.75 மில்லியன் நிலுவையாக இருந்தது. | 2023 சனவரி 31 திகதிக்கு 11900 வீடுகளுக்கு நிலுவை வீட்டு வாடகை தொகை ரூபா 798.56 மில்லியன் மற்றும் நிலுவை ரூபா 798.56 மில்லியன நீர் கட்டணம் ரூபா 154.19 மில்லியன் ஆகும். | அறவிட வேண்டிய தொகையை விரைவில் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கொழும்பு கோட்டை டிரான்ஸ்வொர்க் சதுக்கத்தில் உள்ள காணி ரூபா 4,999.7 மில்லியனிற்கு உள்நாட்டில் நிறுவப்பட்ட வெளிநாட்டு தனியார் நிறுவனமொன்றிற்கு கலப்பு அபிவிருத்தி திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக 2012 ஆண்டின் போது 5 வருட கருத்திட்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்படாததால் 2018 ஜூலை 04 திகதி மீண்டும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும் 2023 ஜூலை அளவில் 05 ஆண்டுகள் கடந்திருந்த | இந்த காணியின் குத்தகை பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதிக்கு இடையில் வித்தியாசம் இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட பிரகாரம் கருத்திட்டத்தை பூர்த்தி செய்த பின்னர் நிர்மாணிக்கப்பட்ட வீட்டு அலகுகளை விற்பனை செய்யும் போது அறவிட வேண்டும். | அறவிட வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

போதும் கருத்திட்டத்தை பூர்த்தி செய்திருக்காததுடன் கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட மொத்த 81 மாடிகளுடன் கூடிய கட்டிடத்தின் 60 மாடிகளிற்காக கட்டிட சட்டகம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த தாமதம் காரணமாக மீள் ஒப்பந்தம் செய்யப்பட்ட 2018 ஜூலை 04 திகதிக்கான சந்தைப் பெறுமதிக்கும் முன்னைய குத்தகை பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமான ரூபா 1,290.04 மில்லியன் இந்த அறிக்கை திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 41 ஆம் இலக்கம் கொண்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் II ஆம் பிரிவின் 8 ஆம் பந்தியின் (ஐ) பிரிவு | குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களினால் செயற்படுத்த வேண்டிய நகர காணிப் பயன்பாட்டுக் கொள்கையை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. | வெளியிடப்பட்ட 85 அதிகார பிரதேசங்களிற்காக தற்போது உத்தேச காணிப் பயன்பாட்டு திட்டத்தை தயாரிதித்து அமுல்படுத்த குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே தேசிய காணி பயன்பாட்டு கொள்கையை தயாரிப்பதற்காக காணி பயன்பாட்டு திணைக்களத்துடன் ஆரம்ப களந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நகர காணிப் பயன்பாட்டுக் கொள்கையை தயாரிப்பதனை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) சட்டத்தின் II பகுதியின் 8 (அ) பிரிவு | அதிகாரசபையினால் இது வரை வெளியிட்டுள்ள 273 நகர அபிவிருத்தி பிரதேசங்களில் இவ்வறிக்கை திகதி வரை 188 அபிவிருத்தி பிரதேசங்களிற்கு அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இது வரை வெளியிடப்பட்ட 85 அதிகார பிரதேசங்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது ஒரு பகுதி உள்ளடங்கும் வகையில் 54 அபிவிருத்தி திட்டங்கள் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளன. | குறித்த அபிவிருத்தி திட்டம் திட்டவட்டமான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 270 (ஆ) பந்தி | வியாபார நடவடிக்கைகள் ஓராண்டிற்கு இடை நிறுத்தப்பட்டால் அவ்வாறான கம்பனிகள் அதிகாரசபையினால் கணக்குகளை தீர்த்து மூடிவிட முடியுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் துணைக் கம்பனியாக அதிகாரசபையினால் 2014 நவம்பர் 21 திகதி நிறுவியிருந்த நகர முதலீட்டு மற்றும் ஆதன வியாபார தனியார் கம்பனி, நகர முதலீட்டு மற்றும் ஹோட்டல் அபிவிருத்தி கம்பனி, ஓர்ஷாட் (Orchard) நகர வீடமைப்பு அபிவிருத்தி கம்பனி மற்றும் வோர்டஸ் எஜ் ஹோடல் அபிவிருத்தி கம்பனி ஆகிய கமபனிகள் தற்போதளவில் செயற்படாததுடன் அவற்றின் கணக்குளை தீர்த்து மூடிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதற்கான முகாமைத்துவ சபை அங்கீகாரம் கிடைத்த பின்னர், ஒவ்வொறு கம்பனிகளிற்கும் விஷேட உத்தேச திட்டங்களை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய சட்ட ஒழுங்கு முறையை பின்பற்றி குறித்த கம்பனிகளின் கணக்குகளை தீர்த்து மூடிவிட வேண்டும். |

(ஈ) **திறைசேரி சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | சுற்றறிக்கை பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமான அதிகார சபை பொறுப்பிலுள்ள, பயன்படுத்தப்படும் அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாகவும் பொது 287 படிவம் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டிய போதும் அவ்வாறான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாகவும் பொது 287 படிவத்தில் உள்ளடங்கும் அநேக தகவல்கள் தொகுதியில் தற்போதும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆண்டினுள் தொகுதியை மேலும் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் ஒழுங்கான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை | | | |
| (i) | 10.2.4 (அ)(ஆ) பந்திகள் | அதிகார சபைக்கு முழு உடமையை கொண்டுள்ள பேலியகொடை வெயா ஹவுஸ் கம்பனியை கலைக்கும் நடவடிக்கைகளின் செயலாற்றுகையை குறித்த வரிசை அமைச்சினால் மேற்பார்வை செய்ய வேண்டியதுடன் திறைசேரி பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு காலாண்டு ரீதியாக அதன் செயலாற்றுகை தொடர்பாக அறிக்கையிட வேண்டும். அவ்வாறே கலைப்பதற்கு எடுக்கும் காலம் 06 மாதகால உச்சமொன்றாக வேண்டியதுடன் அக் கால எல்லையினுள் கலைக்க நடவடிக்கை எடுக்க முடியாத போது கலைக்கும் காலத்தை நீடித்துக் கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் கம்பனி இத் தேவைப்பாட்டிற்கு இணங்கி இருக்காததுடன் 2012 ஜுலை 01 திகதி ஆரம்பிக்கப்பட்ட கலைக்கும் பணிகள் இவ்வறிக்கை அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சபையினால் வழங்கியுள்ள ஆலோசனைகள் பிரகாரம் குறித்த கலைக்கும் நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். | கலைப்பதற்குரிய தீர்மானம் நியாயமாயின் குறித்த கலைக்கும் நடவடிக்கைகளை மேற்குறித்த சுற்றறிக்கை பிரகாரம் விரைவு படுத்த வேண்டியதுடன் சமர்ப்பிக்கப்படாத நிதிக்கூற்றுக்களையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஊ) | 2006 தேசிய பெறுகைகள் வழிகாட்டி கோவை | | | |
| (i) | 4.2.1 (அ), (ஆ) மற்றும் (உ) பந்திகள் மற்றும் 4.2.2 (அ) பந்தி | குறைந்தபட்சம் 03 வருட காலத்திற்கு தயாரித்து 06 மாதங்களிற்கு அதிகரிக்காத காலத்தினுள் தினமும் நாளாதுவரை | 2020 ஆண்டிற்காக பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பெறுகைகள் ஆரம்பிக்கும் திகதி மற்றும் | உரிய படிவத்தின் பிரகாரம் மற்றும் உரிய காலங்கள் உள்ளடங்கும் வகையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆக்கப்பட வேண்டிய பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் பெறுகைகள் செயற்பாடுகளின் போது நடவடிக்கைகளை முறையாக விபரிக்கும் பெறுகைகள் நேர சூசியொன்றை அதிகார சபையினால் தயாரித்திருக்கவில்லை. | பெறுகைகளை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் காலத்தை குறிப்பிடப்பட்டுள்ளது. | பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் பெறுகைகள் நேர சூசி தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 8.10.1 பந்தி மற்றும் 8.11.4 (அ)(i) பந்தி | அதிகார சபையினால் ஒப்படைத்திருந்த ஒப்பந்தங்கள தொடர்பான தகவல்கள் அதிகார சபையின் இணையத்தில் அல்லது ஏனைய பொருத்தமான ஊடகத்திலேனும் பகிரங்கப்புடத்தி இருக்காததுடன், ஒப்பந்தத்தை புறக்கணித்த வழங்குனர்கள் தொடர்பாக தரவு மூலமொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு ஏற்கப்பட்டுள்ளது. | அதிகார சபையினால் ஒப்படைத்திருந்த ஒப்பந்தங்கள தொடர்பான தகவல்கள் அதிகார சபையின் இணையத்தில் அல்லது ஏனைய பொருத்தமான ஊடகத்திலேனும் பகிரங்கப்படுத்த வேண்டும். |
| (எ) | 2015 ஜுன் 17 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் PED 03/2015 | மாதாந்த ஊதியம் பெறும் அலுவலர்கள் முகாமைத்துவ சபை கூட்டங்களிற்கு சமுகமளிக்கும் போது படிகளை பெற்றுக் கொள்ள முடியாத போதும் முன்னால் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக 2015 மார்ச் முதல் 2020 ஒக்டோபர் வரை ரூபா 3.20 மில்லியன் படிகளாக பெற்றிருந்தனர். 2020 திசெம்பர் முதல் குறித்த படிகள் நிறுத்தப்பட்டிருந்த போதும் செலுத்தப்பட்ட தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2013 சனவரி முதல் 2020 நவம்பர் வரை மேற்குறித்த அலுவலர்களிற்கு பங்குபற்றலிற்காக செலுத்திய படிகளை அறவிடுவது தொடர்பான தொகையை, அந்த அலுவலர்களிற்கு அறிவிப்பதற்காக 2023 ஜுன் 22 திகதிய முகாமைத்துவ சபையில் தீர்மானத்துள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். | சட்டரீதியான ஏற்பாடுகளிற்கு மாற்றமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,879.21 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,208.50 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 670.71 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்புத் திட்டத்திலிருந்து கிடைத்த வருமானம் முன்னைய ஆண்டில் இருந்து ரூபா 613.76 மில்லியனால் அதாவது 133 சதவீதத்தால் உயர்வடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| விடயம் | 2020 ஆம் ஆண்டு பெறுமதி ரூபா | 2019 ஆம் ஆண்டு பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | 2019 ஆம் ஆண்டுடன் மீளாய்வாண்டின் போது வேறுபாட்டின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| வருமானம்<br>---------- | | | | |
| வாடகை வருமானம் | 1,734,607,117 | 1,766,194,297 | 31,587,180 | (2) |
| வட்டி வருமானம் | 1,772,290,233 | 1,886,207,657 | 113,908,424 | (6) |
| நடுத்தர வருமானம் பெறுபவர்களின் வீடு விற்பனை வருமானம் | 1,073,750,142 | 459,989,308 | 1,243,760,034 | 133 |
| செலவினம்<br>------------ | | | | |
| சம்பளம் மற்றும் வேதனம் | 1,663,317,110 | 1,680,683,077 | 17,365,967 | (01) |
| பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | 328,023,808 | 353,992,812 | 25,969,004 | (07) |
| மின்சாரக் கட்டணம் | 205,246,922 | 188,487,645 | 16,759,277 | 09 |
| போக்குவரத்து, விளம்பரம், பாதுகாப்பு மற்றும் ஏனையவை | 109,748,188 | 216,588,788 | 106,840,600 | (49) |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொரள்ளை, ஓவல் விச் வீடமைப்பு தொகுதியின் 608 வீட்டு அலகுகள் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யும் போது கிடைத்த தேறிய வருமானம் மேற்கூறப்பட்ட நடுத்தர வருமானம் பெறுபவர்களின் வீட்டு விற்பனை வருமானம் குறிப்பிடக்கூடிய அளவில் உயர்ந்து செல்வதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) நடுத்தர வருமானம் பெறுபவர்களின் வீடுகளின் விற்பனைக்காக செலவிடப்பட்ட விளம்பர செலவினத்தின் காரணமாக 2019 ஆம் ஆண்டின் போது போக்குவரத்து விளம்பரம், பாதுகாப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் மொத்தமாக உயர்வடைந்து காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் போது அந்த செயற்பாடுகள் சதாரண நிலைமைக்கு உட்பட்டமையால் அந்த செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 106 மில்லியனால் அதாவது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அண்ணளவாக அரைவாசி குறைவடைந்திருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

| விகிதம் | 2020 | 2019 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.40:1 | 1.04:1 |
| விரைவு விகிதம் | 1.36:1 | 1.04:1 |
| தேர்வு விகிதம் % | 12 | 13 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறை விகிதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவை 2:1 ஆக இருந்த போதும் அதிகார சபையின் அந்த ஆகக் குறைந்த தேவையேனும் அடையப்படாதிருந்ததன் காரணமாக தொழிற்படு மூலதனப் பிரச்சினைகள் எழக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்ட போதும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நியாயமான அதிகரிப்பொன்றை காண்பித்தது.

(ஆ) விரைவு விகிதம் தொடர்பாக கவனத்திற்கொள்ளும் போது அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆகக்குறைந்த தேவையான 1:1 பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இது மிகவும் திரவத்தன்மையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக நல்ல போக்காகும்.

(இ) தேர்வு விகிதத்தை கவனத்திற்கொள்ளும் போது அதிகார சபையின் மீளாய்வாண்டினதும் கடந்த ஆண்டினதும் சிறந்த தேர்வு ஒன்றை காண்பித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக அதிக நிச்சயமற்ற நிலைமையொன்று அவதானிக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டின் போது அதிகார சபை ரூபா 345 மில்லியன் முதலீடு செய்து ஸ்தாபித்த நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டு (தனியார்) கம்பனி மற்றும் 2010 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியில் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து எந்தவொரு இலாப பங்கும் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் ரூபா 236.81 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த வோட்டர்ஸ் எஜ் கம்பனியிலும் எந்தவொரு இலாப பங்கும் மீளாய்வாண்டிற்காக அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | இந்த துணைக் கம்பனிகளில் முகாமைத்துவ சபையை பிரதிநிதித்துவப்படுகின்ற அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் அக்கம்பனியின் முகாமைத்துவ சபை கூட்டங்கள் சிலவற்றின் போது இது தொடர்பான விடயங்கள் விசாரணை செய்யப்பட்டிருந்தது. எனினும் இலாபப் பங்கு கிடைக்காத நிறுவனம் தொடர்பாக அதிகார சபையின் முகாமைத்துவத்தால் எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இந்தக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களிடமிருந்து 50 சதவீதத்தை விஞ்சிய பிரதிநிதித்துவம் ஒன்று அதிகார சபைக்குச் சொந்தமாக இருந்தமையால் முதலீட்டாளர்களுக்கு நியாயமான இலாபம் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அம்பாந்தோட்டை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாகம் | எதிர்காலத்தில் இந்த நிலையத்தை பேணிச் | செயற்திட்டத்திலிருந்து மாற்றுவழி |

| | | | |
|---|---|---|---|
| | றுஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தை நிர்மாணிக்கும் போது அதில் பிரதான கேட்போர் கூடம், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகராண்மையால் (KOICA) அமெரிக்க டொலர் 6.4 மில்லியன் (ரூபா 851.2 மில்லியன்) செலவிலும் மாநாட்டு மண்டபத்தின் ஏனைய நிர்மாணத்திற்காக ரூபா 3,830.87 மில்லியன் அரசாங்கத்தின் நிதியிலிருந்தும் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அதனை பேணிச்செல்வதற்கு நடைமுறைச் செலவினமாக 2017 முதல் 2020 வரை ரூபா 93.38 மில்லியன் அதிகார சபையினால் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த செயற்திட்டத்திலிருந்து அந்த காலப்பகுதிக்குரியதாக வருமானமாக ரூபா 20.64 மில்லியன் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செயற்திட்டத்தின் கிரயம் வினைத்திறனாக இல்லாத செயற்திட்டமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செல்லல் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தனியார் துறையுடன் ஒன்றிணைந்து (PPP) மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வருமானத்தை உழைப்பது தொடர்பில் எந்த வகையான பிரச்சினையான நிலைமைகள் ஏற்பட்ட போதிலும் அத்தியவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் தவிர்க்க முடியாத சேவைகளின் காரணமாக செலவிட வேண்டிய கிரயம் அவ்வாறு காணப்பட்ட பின்புலத்தில் வருமானத்தை விஞ்சி செலவினம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | வருமானங்களை உழைக்கக்கூடிய வழிகளை கண்டறிய வேண்டியிருந்ததுடன் கட்டிடம் மற்றும் ஏனைய வளங்களின் பாதுகாப்புக்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | காணி கைப்பற்றுவதற்கு உரிய இழப்பீட்டை செலுத்துதல் தொடர்பாக கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த பட்டோலையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 21 சந்தர்ப்பங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணத்தின் அளவான ரூபா 252.25 மில்லியனை விஞ்சிய ரூபா 486.47 மில்லியன் வட்டியாக செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரதேச செயலாளரால் இழப்பீட்டு பரிசோதனைகள் முடியும் வரை மற்றும் இழப்பீட்டாளர்களை இனங்காணும் 38 ஆம் பிரிவின் கீழ் ஆதனங்கள் கையேற்கப்பட்ட திகதியில் இருந்து சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வட்டி செலுத்த வேண்டியுள்ளது. | சிக்கனமற்ற வட்டி செலுத்தாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய துறைகளுடன் சரியான தொடர்பினை பேணிச்செல்லல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கொழும்பு 05 மயூர பிரதேசத்தில் 56.5 பேர்ச் பரப்பளவுடைய காணி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 06 மாதங்கள் அதாவது 2016 யூன் முதல் நவம்பர் வரையான காலத்திற்கு மாதமொன்றிற்கு ரூபா 650,000 மதிப்பீட்டு வாடகை பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது. முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (காணி) ஆக செயற்பட்ட உள்ளக மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் குழுக் கூட்டத்தை நடாத்தாமல் எந்தவொரு நியாயமான காரணமும் காண்பிக்காமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு முறைமையை பின்பற்றாமல் மதிப்பீட்டு பெறுமதியில் 70 சதவீதம் குறைத்து அதாவது மாதாந்த வாடகை ரூபா 200,000 வரை குறைத்து முறையான வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் அந்த காணியைப் பயன்படுத்துவற்காக வழங்கப்பட்டிருந்தது. மேலும் 06 மாத காலத்தை விஞ்சி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 3 1/2 வருடங்கள் அதாவது 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அந்தக் காணியை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வாடகையாளரிடமிருந்து காணியினை பயன்படுத்திய காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை அறவிடப்படாமையினால் | ரூபா 18.90 மில்லியன் நட்டத்தை அறவிடுவதற்காக அதிகார சபையினால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கும் மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழுவிற்கும் தொடர்புபடுத்தி நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. | ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிட வேண்டியிருந்ததுடன் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 18.90 மில்லியன் ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமாக வாடகை அடிப்படையில் VAT மற்றும் NBT ஆக செலுத்த வேண்டிய தொகையும் அறவிடாமையினால் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்டதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதில் ஏற்பட்ட நட்டத்தை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு கோட்டை டீ.ஆர் விஜேவர்த்தன மாவத்தையில் எல்லையில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 றூட் 21.4 பேர்ச் காணி பகிரங்க கூறுவிலை கோராமல் 2007 ஆம் ஆண்டு முதல் கலப்பு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக காணியின் உரித்து ரூன்க் என்டடயிமென்ட் ஹோல்டிங் லிமிடெட் கம்பனிக்கு அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் வழங்கப்பட்டடிருந்தது. அதில் இரண்டு வருடங்களின் பின்னர் அதாவது 2009 ஆகஸ்ட் 12 ஆம் திகதி இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 பெப்ரவரி 18 ஆம் திகதி 30 வருட நீண்ட கால வாடகை உடன்படிக்கையில் ரூபா 1,300 மில்லியன் மதிப்பீட்டு வாடகை பெறுமதியில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக உள்ளக சிரேஸ்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் அதாவது பணிப்பாளர் (சட்டம்), பணிப்பாளர் (கா.அ. மற்றும் கைத்தொழில்), பணிப்பாளர் (சொத்துக்கள் மற்றும் கணிப்பீட்டு உத்தியோகத்தர்), ஆரம்ப பரிசோதனைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் பரிந்துரை 2022 நவம்பர் 07 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன் பின்னர் 2022 நவம்பர் 17 இல் நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது 05 அங்கத்தவர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படயில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு | காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் அதிகார சபையில் காணப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பக அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் உரிய காணியை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| இது தொடர்பாக அதிகார சபையில் காணப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் கொள்கைகளின் பிரகாரம் வாடகைப் பணம் செலுத்தி முடிவுறுத்தும் வரை காணியின் உரித்து வழங்கமுடியாதிருந்த போதிலும் அதற்கு முறனாக வாடகைப் பணம் செலுத்தாதிருக்கும் போது இந்தக் காணியின் உரித்து உரிய கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br>எனினும் கம்பனியால் 2009 ஆகஸ்ட் முதல் 2013 செப்டம்பர் 25 ஆம் திகதி வரையான காலத்தில் 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 557 மில்லியன் ஆன வாடகைப் பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.<br>இதனிடையே இந்தக் காணி 2007 ஆம் ஆண்டிலிருந்து வாகனத் தரிப்பிடமாக பயன்படுத்தி வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியால் 2010 ஆம் ஆண்டிக்குப் பின்னரும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துனர்வு உடன்படிக்கையின் படி காணியில் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. பின்னர் 2013 மார்ச் 25 ஆம் திகதி மீண்டும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கைக்கும் முரணாக உழைக்கப்பட்ட வருமானத்தில் அதிகார சபைக்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படடிருக்க வில்லை. அவ்வாறு இருக்கும் போது 2016 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய பிரதான மதிப்பீட்டாளாரின் ரூபா 3,620 மில்லியன் வாடகை மதிப்பீட்டுப் | தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெறுமதி மீண்டும் 2017 பெப்ரவரி 16 ஆம் திகதிய பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் 50 வருடங்களுக்காக வாடகைக்கு வழங்குவதற்கு ஆரம்ப கம்பனியன் உரிமையாளருக்கு சொந்தமான இன்னுமொரு கம்பனியுடன் ரூபா 3,352 மில்லியன் வாடகைப் பெறுமதியில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட கம்பனி 2007 முதல் 2017 வரை வாகனங்களை தரித்து வைப்பதற்கு பயன்படுத்தி வருமானம் உழைத்த காலத்தில் காணிக்காக செலுத்தப்பட்ட ரூபா 557 மில்லியன் வட்டி அவர்களுக்கு செலுத்தவேண்டியதாக இருந்தமைக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி பிரதான மதிப்பீட்டாளரின் பெறுமதியில் ரூபா 330 மில்லியன் இனை குறைப்பதற்கு அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் முறையான அங்கீகாரமின்றி அதிகார சபை கம்பனியுடன் இணங்கியிருந்தது. இதன் காரணமாக அதிகார சபைக்கு ஏற்பட்ட சட்டம் தொடர்ாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் எடுக்கப்படாதிருந்தடன் 2023 யூலை 30 ஆம் திகதி வரையும் எந்தவொரு அபிபவிருத்தி நடவடிக்கைகளும் அந்தக் காணியில் மேற்கொள்ளப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்பு தொகுதிகளில் குடியமர்த்தும் போது அவர்கள் குடியிருக்கின்ற இடங்கள் (தோட்டம்) 18 காணிகளை விடுவிக்கவேண்டி ஏற்பட்டமையினால் 06 தோட்டங்களுக்குரிய 11.23 ஹெக்டயர் அளவான காணிகளின் உரித்து அதிகார சபைக்கு இதுவரை கையேற்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே நகர புனர்வாழ்வு செயற்றிடடத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நிர்மாணிக்கப்பட்ட 22 வீடமைப்பு தொகுதிகளுக்குரிய காணிகளுக்கு இடையே 09 வீடமைப்பு உத்தேச திட்டங்கள் ஸ்தாபித்த காணி இதுவரை அதிகார சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக வீட்டு நலனாளிகளுக்கு அந்த வீடுகளின் உரித்தை வழங்குதல் வீட்டு திட்ட முறைமைகளுக்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழை வழங்குவதற்கு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | 22 வீடமைப்பு தொகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணிகளுக்கிடையே 13 வீடமைப்பு தொகுதிகள் அமைக்கப்பட்ட காணிகள் 6(1) பிரிவின் கீழ் கொடுப்பனவு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | கையேற்கப்படாத காணிகளில் விரைவாக கையேற்க வேண்டியிருந்ததுடன் வீடமைப்பு திட்ட முறைமைகளுக்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையால் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற நகர புனர்வாழ்வு செயற்றிட்டத்தின் கீழ் நிர்மானிப்பதற்று உத்தேசிக்கப்பட்ட 68,000 | வெற்று நிலைமையில் காணப்படுகின்ற 271 வீடுகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் நகர புனர்வாழ்வு செயற்றட்டத்தின் கீழ் 951 | ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை உச்ச அளவில் வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வீட்டு அலகுகளில் 14,542 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு அதிலும் 12,325 வீட்டு அலகுகள் மாத்திரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வீட்டு நலனாளிகள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். 1,946 வீட்டு அலகுகள் பல்வேறு அரசாங்கத்தின் செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 271 வீடுகள் பயனற்று காணப்பட்டது. குடியமர்த்தப்பட்ட வீட்டு நலனாளிகளுக்கு வீடுகளின் உரித்தை வழங்குவதற்கு முடியாமையினால் அவற்றின் முகாமைத்துவ கூட்டினை ஸ்தாபித்து பராமரிப்பு நடவடிக்கைகளை கையளிப்பதற்கு முடியாமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் இந்த வீட்டு அலகுகளின் மின்சாரம், பாதுகாப்பு செலவினம், நீர், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 230.93 மில்லியன் செலவிடுவதற்கு அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்ததுடன் குறித்தரைத்த பிரகாரம் மின்சாரப் பட்டியல் செலுத்தாமையின் அடிபப்படையில் 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 1.2 மில்லியன் தண்டப்பணமும் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

வீட்டு அலகுகளின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருந்ததுடன் பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக செயற்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்காக சுயநிதி ஏற்பாட்டின் கீழ் அதில் 450 வீட்டு அலகுகளை திறந்து சந்தையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறே நகர புனர்வாழ்வு செயற்றிட்டத்திற்கு ஒத்துழைப்பு காண்பிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் 4,074 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் சீன நிதியுதவியின் கீழ் 1,996 வீட்டு அலகுகள் குறைந்த வருமானம் பெறுவோர்களுக்காக நிர்மானிக்கும் நடவடிக்கைகள் அவ்வப்போது ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(இ) பொது மக்களுக்கு சேவையினை வழங்குகின்ற நிதி மற்றும் நிர்வாக நிறுவன தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான இடமொன்றாக இராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையில் அமைந்துள்ள 04 ஏக்கர் 43 பேர்ச் அளவான 03 காணிக்

அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் கீழ் விசேட படி பத்திரம் இந்தக் காணிக்காக வழங்குமாறு 2022 செப்டெம்பர் 16 ஆம் திகதி கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தால் தேவையான நடவடிக்கைகள்

கைப்பற்றப்பட்ட காணிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | கூறுகள் 2013 ஒக்டோபர் 09 ஆம் திகதி அதிகார சபையினால் கைப்பற்றப்பட்டிருந்தது. எனினும் இவ்வாறு கைப்பற்றப்பட்ட காணியில் 02 ஏக்கர் 03 றூட் 01 பேர்ச் அளவான 02 காணிக் கூறுகள் 2015 ஆம் ஆண்டின் போதும் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போதும் ஆரம்ப உரிமையாளர்களுக்கு மீண்டும் உரித்தற்றதாக்கப்பட்டிருந்தது டன் மிகுதி 01 றூட் 02 பேர்ச் காணி அளவிற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 213.22 மில்லியன் இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்தக் காணிக் கூறு 2023 யூன் வரையிலும் ஆரம்ப தரப்பினர் மேற்கொண்ட பணிகள் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் அல்லது ஏனைய எந்தவொரு அபிவிருத்தி பணிகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படுகின்றது. அதனை பெற்றுக்கொண்ட பின்னர் பொருத்தமான அபிவிருத்தி பணிகளுக்காக மூன்றாந் தரப்பினருக்கு காணியை விடுவிடுப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டின் செப்டெம்பர் மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்ட 608 வீட்டு அலகுகளை உள்ளடக்கிய ஓவல் விச் வீடமைப்பு செயற்திட்டத்தின் வீட்டு நலனாளிகள் மற்றும் 2018 இல் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 500 வீட்டு அலகுகளை உள்ளடக்கிய அங்கோடை லேக் கிறிஸ்ட் வீடமைப்பு செயற்திட்டத்தின் வீட்டு நலனாளிகளால் முறையே ரூபா 4,756.32 மில்லியன் மற்றும் ரூபா 816.3 மில்லியன் தொகையொன்று அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருக்கும் போது அந்த குடியிருப்பாளர்களுக்கு | 2023 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரையில் இந்த செயற்திட்டத்தில் 144 கையளித்தல் மாத்திரம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி வீட்டு நலனாளிகளின் ஆதனங்கள் தற்போதைய சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் முத்திரைக் கட்டணம் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் தொடர்பான பிரச்சினைகளின் அடிப்படையில் கையளித்து கையொப்பமிடலில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | காணப்படுகின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் குடியிருப்பாளர்களு க்கு வீடுகளின் சட்ட ரீதியான உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீடுகளின் சட்ட ரீதியான உரித்தைக் கையளித்தல் 2023 யூலை வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (உ) | கொழும்பு புறக்கோட்டை சந்தை தொகுதி (மெனிங் மார்க்கட்) பேலியகொட மீண்டும் ஸ்தாபிப்பதற்காக அதிகார சபையால் 2016 ஆம் ஆண்டின் போதும் ரூபா 6.9 பில்லியன் திறைசேரி நிதி ஏற்பாடு பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பேலியகொட சந்தை தொகுதி மீளாய்வாண்டின் செப்டெம்பர் வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2022 செப்டெம்பர் 15 வரையிலும் அதில் 1,395 கடைகளில் 417 கடைகள் வியாபாரிகளுக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தக் கணக்காய்வுப் பந்தியில் 2022 நவம்பர் 30 இல் உள்ளவாறு மாற்று வியாபாரக் கொட்டகைகளை வழங்காதிருந்ததாக அறிக்கையிடப்பட்டது எனக் குறிப்பிட்டு மெனிங் வியாபாரிகள் 167 பேர்களுக்கும் மாற்று வியாபார கொட்டகைகள் வழங்கப்பட்டுள்ளது. | உரிய கடைகள் தகைமைகளைப் பூர்த்தி செய்த வியாபாரிகளுக்கு வழங்கி அதிகார சபைக்கு கிடைக்கின்ற வருமானத்தை அதிகரித்தல் வேண்டும். |
| (ஊ) | பன்னிப்பிட்டி வீர மாவத்தையில் அமைந்துள்ள 500 வீடுகளையுடைய வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் கம்பனிக்கு 2017 யூன் 15 ஆம் திகதி ஒப்பந்தம் கையளிக்கப் பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2019 திசெம்பர் 31 ஆக இருந்த போதும் அந்த காலத்தில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக அதிகார சபையின் தலைவரின் அங்கீகாரத்தில் 2022 செப்டெம்பர் 29 வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த 500 வீட்டு | A,B,C மற்றும் D வீட்டு கோபுரத்தில் 101 வீதமும் E தளத்தில் 96 வீடுகளும் ஆக செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் வீட்டுக் கோபுர இலக்கம் B மற்றும் D நிர்மாணித்தல் தற்போது முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் C கோபுரத்தில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்தல் இன்னும் இரண்டு வாரங்களில் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. A மற்றும் E கோபுரங்களில் இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பூர்த்தி செய்து நலனாளிகளுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. B கோபுரத்தில் 101 வீடுகளுக்காக அரசாங்கத்தின் | செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்து வீடுகளை விரைவாக வீட்டு நலனாளிகளுக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் மிகுதி வீடுகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருமான வழிகளை அதிகரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அலகுகளில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படைக்கு 101 வீட்டு அலகுகளும், முன் விற்பனைத் திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட 202 வீட்டு அலகுகளும் இருந்ததுடன் மிகுதியான 197 வீடுகள் முன் விற்பனை அடிப்படையில் இல்லாமல் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படையினால் ரூபா 1,011.79 மில்லியன் மற்றும் முன் விற்பனை திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட வீடுகளுக்காக ரூபா 2,176.84 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,188.63 மில்லியன் அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதும் 2023 யூலை வரையிலும் அந்த வீடுகளின் வேலைகள் பூர்த்தி செய்து வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் D கோபுரத்தில் 101 வீடுகளுக்கிடையே நிதி செலுத்திலுள்ள 95 வீட்டு அலகுகள் குடியிருப்பாளர்களை குடியமர்த்துதல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. E கோபுரத்தில் 96 வீடுகளுக்கிடையே 43 அலகுகள் மாத்திரம் தற்போது வாடிக்கையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் நாட்டில் அதன் பின் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி நிலைமையின் அடிப்படையில் நிர்மாணக் கைத்தொழிலில் ஏற்பட்டிருந்த பின்னடைவின் காரணமாக அதனை பூர்த்தி செய்வதற்கு வசதியீனமாக இருந்தது. | |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாதாந்த வாடகை அடிப்படையில் வணிக நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு வழங்கப்பட்ட 7,655 வளாகங்கள் காணப்பட்டதுடன் அதில் செயற்பாடற்ற வாடகை உரிமையாளர்களின் எண்ணிக்கை 3,053 அதாவது 47 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் இறுதி வரையில் அந்த வாடகை உரிமையாளர் களிடமிருந்து அதிகார | 2020 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் வாடகைக் கடன்பட்டோரிடமிருந்து செயற்பாட்டிலுள்ள கடன்பட்டோர் எண்ணிக்கை 4602 ஆகவும், செயலிழந்த கடன்பட்டோர் 3053 ஆகவும் மொத்தமாக 7655 ஆக இருந்தது. செயற்பாட்டிலுள்ள மற்றும் செயலிழந்த கடன்பட்டோர்களின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 255.79 மில்லியன் மற்றும் ரூபா 718.25 மில்லியன் | செயற்பாட்டிலுள்ள வாடகை உரிமையாளர்களிடமிருந்து நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 255.79 மில்லியன் ஆகும். மேலும் செயற்பாட்டிலுள்ள வாடகை உரிமையாளர்கள் 4,602 பேர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வாடகை மீதி ரூபா 718.25 மில்லியன் ஆகும். அதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பெறுமதிசேர் வரி (VAT) வருமானம் ரூபா 90.66 மில்லியனும் உரித்தற்கு இருந்தமை அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு போதியளவான கவனம் செலுத்தாமை இதற்கான பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | அறவிட வேண்டியிருந்தது. அதிகார சபையின் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவு மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு வாடிக்கையாளர்களின் மாதாந்த வருமானம் மற்றும் செலுத்துதலுக்குரிய இயலுமை தொடர்பாக மதிப்பிட்டு உரிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் போதியளவான பாதுகாப்பு வைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | கொம்பனித்தெரு மீள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய காணியில் குடியிருந்த குடும்பங்களுக்காக மாடி வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் நிர்மாண நடவடிக்கைகளைக் கையளித்த ஒப்பந்தரகாரர்களின் தாமத்தின் அடிப்படையில் உரிய நிர்மாணங்கள் ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா 5.49 மில்லியன் மேலதிக ஆலோசனைக் கட்டணம் மற்றும் காணியில் ஆரம்ப குடியிருப்பாளர்களுக்காக மாடி வீட்டு அலகுகளை வழங்கும் வரை மாதாந்த | செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக நிர்மாணிக்கப்பட்ட 62 வீட்டு அலகுகளுக்கு இடையே 58 வீட்டு அலகுகள் விற்பனை செய்ததால் ரூபா 612.80 மில்லியன் வருமானம் இந்த அதிகார சபை அறிக்கையிட்டு இருந்தது. அதன் பிரகாரம் இந்த மேலதிக வீட்டு அலகுகளை விற்பனை செய்வதன் மூலம் ரூபா 141 மில்லியனுக்கு அண்மித்த இலாபம் இந்த அதிகார சபை அறிக்கையிட்டு இருந்தது. அதன் பிரகாரம் உரிய அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்காக செலுத்துதல் மற்றும் தற்காலிக குடியிருப்புக்காக செலுத்தப்பட்ட வாடகைப் பணம் முழுமையாக உரிய மேலதிக வீட்டு | கம்பனியிலிருந்து பெறவேண்டிய பணத்தை மீளளிப்புச் செய்துகொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகையாக ரூபா 61.20 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 66.69 மில்லியன் அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த தொகை காணி அபிவிருத்தி கம்பனியில் இருந்து 2023 யூலை வரையும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்க வில்லை. | அலகுகளை விற்பனை செய்ததன் அடிப்படையில் மேவுகை செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | பேலியகொட வெயா ஹவுசஸ் கம்பனியில் ரூபா 376.44 மில்லியன் கிரயத்துடன் களஞ்சியக் கட்டிடம் 2017 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் அதிகார சபைக்கு கையேற்பதற்கு அதிகார சபையின் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் உரிய கட்டடம் அதிகார சபைக்கு கையளித்தல் மற்றும் அதன் பிரகாரம் அதிகார சபையின் சொத்தொன்றாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது அதிகார சபையினால் இந்த களஞ்சியத் தொகுதி வாடகைக்கு வழங்கியதால் 2017 ஆகஸ்ட் முதல் 2020 திசெம்பர் 31 வரை ரூபா 45.85 மில்லியன் வாடகை வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | இந்த களஞ்சியத் தொகுதி தொடர்ந்தும் PWCC கம்பனியின் கணக்கு ஏடுகளில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் கலைப்பாளரினால் கலைத்தல் கணக்கு சமர்ப்பிக்கப்படும் வரை அதிகார சபையின் கணக்குகளுக்கு பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது. எனினும் கலைப்பாளரால் கலைத்தல் கணக்கு சமர்ப்பிப்பதன் கீழ் 2017 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் களஞ்சியத் தொகுதிகளின் முகாமைத்துவம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட மையால் இந்த வாடகைப் பணம் உழைக்கப்பட்டுள்ளது. | இந்த களஞ்சிய தொகுதி அதிகார சபைக்கு கையேற்று ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாட்டில் பிரதான நகரங்களைக் கேந்திரமாக கொண்ட உத்தேச நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தினதும் தனியாரினதும் காணிகள் அதிகார சபைக்கு | 80 சமூக மண்டபம் 2023 யூன் 23 ஆம் திகதி முதல் பொது மக்களுக்கு திறந்த வைத்து செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் பேணிச்செல்வதற்காக நடவடிக்கை | உரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சமூக மண்டபங்களை பொது மக்களுக்கு திறந்து வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்பதற்கு 2020 ஒக்டோபர் 12 ஆம் திகதிய இலக்கம் MUD/H/2020/CP/37 என்ற அமைச்சரவை குறிப்பிற்காக 2020 ஒக்டோபர் 27 ஆம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்தக் குறிப்பில் இணைக்கப்பட்டுள்ள 45 காணிகளுக்கு இடையே சமூக மண்டபங்களாக பேணிச்செல்ல வேண்டிய ஓட்டர்ஸ் எக்விட்டிக் மற்றும் 80 கிளப் என்ற நிறுவனம் இரண்டும் அமைந்துள்ள 1.8274 ஹெக்டேயர் கட்டிடத்துடனான மூன்று காணிகள் அதிகார சபையின் கையேற்கப்பட்டு அபிவிருத்தி செய்து பொது மக்களுக்கு திறந்து வைக்க வேண்டுமென அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் அதிகார சபை 2023 யூன் வரையும் உரிய சமூக மண்டபத்தை மக்களுக்கு திறந்துவைத்திருக்கவில்லை. மேலும் 80 கிளப் சமூக மண்டபத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அதிகார சபையால் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 453.88 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த சமூக மண்டபங்கள் அமைந்துள்ள காணிகளுக்காக முதலீட்டு திட்ட முன்மொழிவுகளைக் கோருவதற்கு உரிய நடவடிக்கைகள் அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஓட்டர்ஸ் சமூக மண்டபம் அமைந்துள்ள காணியில் ஒரு பகுதி கலப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2021 யூன் 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரை அறிவித்தல் மூலம் கேள்வி கோரப்பட்டபோதும் அது வெற்றியளித்திருக்கவில்லை. | |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டு கொடுப்பனவுப் பட்டோலையின் பிரகாரம் அதிகார சபையினால் கையேற்கப்பட்ட காணிகளில் 66 ஏக்கர் 02 றூட் 25.5 பேர்ச் அளவிற்காக உரிமையாளர்கள் குறித்துரைத்த ரீதியில் இனங்காண முடியாதிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட இழப்பீட்டு தொகை ரூபா 2,040.72 மில்லியன் மற்றும் வட்டி ரூபா 493.83 | காணி கைப்பற்றல் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் கையேற்கப்பட்ட ஆதனங்களில் பிரதேச செயலாளரால் இழப்பீட்டு பரிசோதனை பூர்த்தி செய்யப்படும்வரை மற்றும் இழப்பீட்டாளர்களை இனங்காணும் வரை 38 ஆம் பிரிவின் கீழ் ஆதனங்களை கையேற்ற திகதி முதல் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் வட்டி செலுத்த வேண்டியுள்ளது. | உரிய நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி காணி உரிமையாளரை விரைவாக இனங்கண்டு அதிகார சபைக்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற இழப்பீட்டு வட்டியை குறைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் ஆகும். இந்த மீதிகளுக்கிடையே 1984 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற மீதியும் காணப்பட்டதுடன் உரிமையார்களை இனங்காண முடியாமையின் காரணமாக அதிகார சபைக்கு வட்டியாக மேலதிக செலவினப் பொறுப்பொனறை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | | |

**3.6 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நகர அபிவிருத்தி வலையமாக வெளியிடப்பட்ட கொலன்னாவ ராஜகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள 6.451 ஏக்கர் பரப்பளவுடைய காணியில் கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 1964 இன் 28 ஆம் இலக்க காணி கைப்பெற்றல் (திருத்த) சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் அதிகாரம் கையளித்தல் சான்றிதழ் பத்திரம் 2008 ஏப்ரல் 23 ஆம் திகதி அதிகார சபைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் காணி கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் காணிக்காக சட்ட ரீதியான உரித்து கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 28 ஆம் திகதி வரையிலும் அதிகார சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. 2012 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி | காணி கைப்பற்றல் செலவினமாக செலவிடப்பட்டுள்ள தற்போது 2012 ஆம் ஆண்டின் போது இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டுள்ள் பெறுமதி 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு கூற்றுக்களிலும் இழப்பீடாக குறித்துரைத்த பெறுமதி உள்ளடக்கப்படாத போதும் காணி அபிவிருத்தி செய்கின்ற சந்தர்ப்பத்தின் போதும் அந்த ஆண்டிற்குரிய மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் இறுதிக் கணக்குகளில் சீராக்கங்கள் மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சதுப்புடன் நிலமான காணிக்காக 6(1) பிரிவின் கீழ் படி பத்திரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் பொருத்தமான அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கும் சுற்றாடல் விடுவிடுத்தல் சான்றிதழை உள்ளடக்கிய உரிய சகல அங்கீகாரங்களையும் | காணியின் சட்ட ரீதியான உரித்தை விரைவாக கையேற்க வேண்டியிருந்த துடன் இந்தக் காணியை மிகவும் ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மதிப்பீடு அதிகார சபையின் சொத்துக்களில் இந்த காணி அகற்றப்பட்டமையால் காணி அபிவிருத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 4.46 மில்லியன் செலவினம் 2012 ஆம் ஆண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. கொலன்னாவ எண்ணெய் களஞ்சியத் தொகுதியின் அருகில் ஸ்தாபிக்கப்பட்ட சமூக பாதுகாப்புக்குத் தேவையான இந்த நிலத்தில் கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக ஈடுபடுத்துவதற்கு சாத்தியவள ஆய்வு அல்லது கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற சுற்றாடல் அனுமதிப் பத்திரமும் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த காணி தற்போது எந்தவொரு பணிகளுக்கும் ஈடுபடுத்தப்படாமல் பயனற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பெற்றுக் கொண்டதன் பின்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை வலய அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு இணங்க அனுமதி பெற்ற அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | முன்னாள் காணப்பட்ட மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ‘‘சூகித்த புறவர’’ நகர அபிவிருத்தி செயற்திட்டத்தில் ஒரு கட்டமான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 269.12 மில்லியன் ஆன 05 மாடிகளையுடைய மகர நிர்வாக மற்றும் வணிக கட்டிடத் தொகுதியை | முழுக் கட்டிடமும் மஹர பிரதேச சபைக்கு வழங்குவதற்காக கிடைத்த ஆலோசனையின் அடிப்படையில் 2023 சனவரி 19 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்காக அங்கீகாரமும் உரித்தாகி இருந்தது. அதன் பிரகாரம் இரு தரப்பினர்களுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அதிகார சபைக்கு நட்டம் ஏற்படாத வகையில் உரிய கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் அதிகார சபையால் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2019 இல் பூர்த்தி செய்யப் பட்டிருந்த போதிலும் உரிய பிரகாரம் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே தரைமாடி மற்றும் முதலாவது மாடியில் 04 அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டி ருந்த போதும் கட்டிடத்தின் மிகுதி பகுதி திட்டமிடப்பட்ட பிரகாரம் எந்தவொரு வணிக அல்லது அலுவலக வசதிகளுக்காகவும் பயன்படுத்தப்படாமல் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டது.

(இ) 2006 ஆம் ஆண்டின் போது காலி நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எலோசியஸ் கல்லூரி விளையாட்டரங்கு, காலி சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு மற்றும் விளையாட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக வீடுகள், பயிர்ச்செய்கைகள் மற்றும் வியாபார முயற்சிகள் காணப்பட்ட அடுத்துள்ள காணிகளில் 16 ஏக்கர் 03 றூட் 0.57 பேர்ச் கைப்பற்றுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. இந்தக் காணிகளுக்காக இழப்பீட்டுப் பணம் செலுத்தி தீர்த்துவைப்பதற்காக ரூபா 400 மில்லியன் தொகை பொதுத் திறைசேரியிலிருந்து கோரப்பட்டிருந்ததுடன் 2021 யூலை 13 இல் காலி, தடல்ல இல் அமைந்துள்ள 16 ஏக்கர் 03 றூட் 0.57 பேர்ச் அளவான முழுக் காணியும் கைப்பற்றல் நடவடிக்கைகள் பிரதேச செயலாளர் மூலம் மேற்கொள்ளப்பட்டு

விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியுமான பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபை அங்கீகாரம் பெற்று வரிசை அமைச்சு ஊடாக காணி அமைச்சிற்கு அறிவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மிகவும் ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கை செயற்பாடுகளில் இந்தக் காணியைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு ரூபா 281.57 மில்லியன் இழப்பீடு மற்றும் வட்டிக்காக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு கையேற்கப்பட்ட நிலத்தின் அதிக அளவு 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (ஈ) | அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு கோட்டை டீ.ஆர் விஜேயவர்தன மாவத்தை எல்லையில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 றூட் 21.4 பேர்ச் அளவான காணி 2023 யூன் வரையும் எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 2022 நவம்பர் 17 இல் நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது 05 அங்கத்தவர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இந்தக் காணிகளை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அதிகார சபையின் வருமான வழிகளை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.7 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரியில் ஆரம்பித்து 2019 திசெம்பர் 31 இல் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட 05 கட்டங்களை உடைய ரூபா 400 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடன் பேரேவெவயில் மேற்கு கரையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 20 மில்லியன் ஆன ஒரு செயற்திட்ட வேலை பூர்த்தி செய்யப்படாமல் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | தற்போது இதில் 68 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. காணப்படுகின்ற நிதி ரீதியான பிரச்சினைகளின் பிரகாரம் மேலும் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளல் வசதியினத்தின் அடிப்படையில் அன்னியோன்னய புரிந்துணர்வுடன் ஒப்பந்தம் பூர்த்தி செய்து நகர அபிவிருத்தி அதிகார சபை கையேற்றுள்ளது. | அதிகார சபைக்கு எதிர்காலத்தில் தேவையற்ற செலவினப் பொறுப்பு மற்றும் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நிர்மாணங்களை பூர்த்தி செய்து அதிகார சபைக்கு கையேற்றல் வேண்டும். |
| (ஆ) | மீத்தொட்டமுல்ல புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் நகர பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 | கழிவுப் பொருள் மலை ஆலோசனையா ளர்களின் மாதிரிகளின் பிரகாரம் பொது மக்களுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் | காணி கைப்பற்றல் நடவடிக்கைகளை விரைவு படுத்தி இந்த நிலத்தை ஆக்கபூர்வமான, |

ஆண்டின் போது மண்சரிவிற்கு உட்பட்ட கழிவுப்பொருள் மலையை நீக்கும் வகையில் பிளேன்கட் படையொன்றை இடல் மற்றும் இயற்கை வாயு பிரிவொன்றை ஸ்தாபிக்கும் ஒப்பந்தம் 2020 யூன் 09 ஆம் திகதி ரூபா 269.5 மில்லியனுக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.
இந்த செயற்திட்டத்திற்காக 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி வரையில் ரூபா 432.95 மில்லியன் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்த போதும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பூங்கா நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் அகற்றப்பட்ட கழிவுகள் அமைந்துள்ள இடத்தில் தற்போது காடு வளர்ந்து கைவிடப்பட்டிருந்தமை கணக்காய்வினால் 2021 திசெம்பர் 23 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.
அவ்வாறே இந்த இடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அகற்றப்படுகின்ற கழிவு நீர் வாய்க்கால்களிலும் நிலக்கீழ் நீருக்கும் சேர்வதைத் தடுத்தல் மற்றும் வாயு நிலையம் ஊடாக எரிவாயுவை சேகரிக்கும் முறைமையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.
மேலும் அதிகார சபை எதிர்பார்த்த பிரகாரம் அரசாங்க துறை அரசாங்க தனியார் துறை ஒன்றிணைந்து செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக காணி கைப்பற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தமையும்

அகற்றப் பட்டதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) இனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கழிவு நீர் அகற்றும் முறைமை 30 சதவீத அளவு மாசுற்ற வாயு முறைமையில் 25 சதவீதமும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
இந்த செயற்திட்டத்தின் மிகுதி வேலைப் பகுதியை பூர்த்தி செய்வதற்கு தனியார் துறையின் முதலீட்டாளரை தெரிவு செய்யும் வகையில் முதலீட்டுத் திட்டங்களைக் கோருவதற்காக தேவையான ஆரம்ப படிமுறைகள் இந்த அதிகார சபையால் தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் சுற்றாடல் நடவடிக்கை களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்வேறு தேவைகளுக்காக கொழும்பிற்கும் மற்றும் கொழும்பிற்கு அண்மித்த நகரங்களுக்கும் மோட்டார் வாகனங்களில் வருகை தருகின்ற பொது மக்களின் மோட்டார் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் மற்றும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கொழும்பு மற்றும் சுற்றுப்புற நகரங்களில் வீதியின் நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவற்கு முன்னிற்கும் தேவையொன்று அதிகார சபையினால் செய்ய வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக அதிகார சபை போதியளவான கவனம் செலுத்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது. நகர உட்புரத்தில் வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்காக 15 செயற்திட்டங்களில் 05 உடன்படிக்கைகளின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திறைசேரி நிதியத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அங்கீகாரத்திற்காக செயற்திட்ட அறிக்கை தயாரித்து தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இது வரை நிதிக்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | நகரங்களில் வீதி நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நிறைவேற்றப்படாத செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.8 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையில் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத திட்டமிடல் உதவியாளர் பதவிக்காக 108 உத்தியோகத்தர்கள் அதிகார சபையின் கீழ் உள்ள துணைக் கம்பனிகள் ஊடாக சேர்க்கப்பட்டு அதிகார சபையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களுக்காக 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் கூட்டு மொத்தமாக ரூபா 99.21 | அதிகார சபையின் தேவையின் அடிப்படையில் உப கம்பனி ஊடாக சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இந்த உத்தியோகத்தர்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பதவியணியினர் திட்டத்தில் உள்ளடக்கி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் அதிகார | அதிகார சபைக்கு தேவையான பதவியணியினர் துணைக் கம்பனிகள் ஊடாக ஆட்சேர்த்தலை மேற்கொள்ளா திருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | சபையின் நிரந்தர பதவியணியில் உள்ளடக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**4. கணகக்ளிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அதிகார சபையால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் 2023 சனவரி 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 02 வருடங்களுக்கு அண்மித்த தாமதம் அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கணக்கீட்டு பொறுப்புக்கள் கால ரீதியில் நிறைவேற்று வதற்காக நிதிக்கூற்றுக்கள் கால அட்டவணையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**4.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறன்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) அதிகார சபையால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற நிதி முகாமைத்துவம் முறைமை (FMIS) தனியார் வழங்குநரிடமிருந்து நிறுவன தேவைகளுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படுகின்றது. இந்த தகவல் முறைமை அதிகார சபையின் ஏனைய முறைமைகளுடன் ஈடுபடுத்துதலுடன் உள்ளீர்க்க முடியாதிருந்த துடன் சுயாதீன மற்றும் தனியாக செயற்படுகின்ற முறைமையாகும். மேலும் இந்த முறைமை கட்டியெழுப்பப்பட்டுள்ள தொழில்நுட்பமும் காலாவதியாகிய ஒன்றாகும். அவ்வாறே இந்த முறைமையை அபிவிருத்தி செய்த வழங்குநருக்கு அதிகார சபையின் | ஆதன முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் அதிகார சபையின் ஒட்டுமொத்த நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றலைத் தீர்மானிக்கின்ற நிதி பிரிவின் நடவடிக்கைகளுக்கும் நேரடியாக தொடர்புபடுகின்றது என்ற கூற்றுடன் இணங்கியிருக்கவில்லை. முறைமையில் குறைபாடுகள் காணப்பட்டமையால் அதனை சரிசெய்வதற்கு முறைமையை அபிவிருத்தி செய்தல் அல்லது புதிய முறைமை ஒன்றை ஸ்தாபித்தல் தேவை உள்ளமையால் தற்போது முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் புதிய முறைமை ஒன்றை மிகவும் | காணப்படுகின்ற முறைமையை ஸ்தாபிக்கும் போதும், அமுல்படுத்தும் போதும் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை நீக்கும் வகையில் விரிவான முகாமைத்துவ முறைமை யொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தை உழைத்தல் தொடர்பாக நேரடியாக தொடர்புபடுகின்ற ஆதன முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளைப் போன்று அதிகார சபையின் ஒட்டுமொத்த நிதி நிலைமை மற்றும் நிதி செயலாற்றலைத் தீர்மானிக்கின்ற நிதிப் பிரிவின் நடவடிக்கைகளுக்கும் குறிப்பாக தாக்கமளித்திருந்தது. | விரைவாக ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | தற்போது அதிகார சபைக்குச் சொந்தமான கணக்கீட்டு மென்பொருள் முறைமையை ஸ்தாபிப்பதற்காக ரூபா 8.30 மில்லியன் மற்றும் 2022 யூலை 22 ஆந் திகதி வரை பராமரிப்பு மற்றும் சேவைகளுக்காக 02 சேவை உடன்படிக்கைகளுக்காக 02 வருடங்களுக்காக ரூபா 2.16 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக 10.46 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று, கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு, கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் இணக்க அறிக்கை, வருடாந்த பெறுமானத் தேய்வு கணிப்பிடல், முதலீடு செய்யப்பட்ட ஆதன பதிவேடு, வழங்கப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலையான வைப்பு பதிவேடு, மதிப்பிழந்த காசோலைப் பதிவேடு, வங்கி இணக்கக்கூற்று அறிக்கைகள் கணக்கீட்டு முறைமையின் மூலம் பெற முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வற் பட்டோலை தவிர ஏனைய ஆவணங்கள் மற்றும் வெளியீடுகள் முழுமையாகக் காணப்படுகின்ற கணக்கீட்டு முறைமையில் பெறமுடியாதுள்ளது. முறைமை வழங்குநரை அழைத்து உரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | காணப்படுகின்ற முறைமையை அமுல்படுத்தும் போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளை நீக்கும் வகையில் விரிவான நிதி முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |